மாணவர்களிடையே அமைதியின்மை இருந்து வருவது பற்றி, 27—7—77 அன்று கல்லூரி முதல்வர்கள் மாணவர்கள் பிரதிநிதிகள், கல்லூரி கல்வி இயக்குநர் ஆகியவர்கள் அடங்கிய கூட்டம் நடந்தது. அதில் மாணவர்கள் தங்களுடைய குறைகளை அரசிடமும், சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வர்களிடமும் எடுத்துக் கூறி பரிகாரம் காணலாமென்றும் இதுமாதிரியான வேலைநிறுத்தம், ஊர்வலம் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடவேண்டாமென்றும், மாணவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. மாணவர்களும் இனிமேல் இதுமாதிரி நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டோம் என உறுதி கூறியுள்ளார்கள்.

எனவே, இதற்காக இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து, விவாதிக்க வேண்டிய தேவையில்லையென்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

(3) அரசினர் தீர்மானம்:

விதி 41(3)—ஐத் தளர்த்தல்:

மாண்புமிகு திரு கி. மனோகரன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

'தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடைமுறை விதி 41(3) இன் கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட பொருள்களை கவன ஈர்ப்புக்கு கொண்டு வரக்கூடாது என்ற விதியை இன்று தளர்த்தவேண்டும்.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

(4) தகவல் கோரல்.

ஒத்திவைப்புத் தீர்மானங்கள் குறித்து.

திரு. சி. கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பத்திலே நடந்த சம்பவம் சம்பந்தமாக நேற்றுக் காலை ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வராத காரணத்தால் இன்றைக்கு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS